
# அருட்பிச்சை வழங்கு நிலை



**நிர்வாணத் தத்துவமே சீவ நிலை**
பிச்சாடனர் நிலை — சிவநிலை

# குருதேவர்

**இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை - 36**

(உறுப்பினர்களுக்கு மட்டும்) பதிவு: 135/83

வெளியீடு: 26—12—86

காணிக்கை: ரூ 1-00

# சித்தர் இராமாயணம் - 8

'என் கணவர் சம்பந்தி தசரதனின் ஈமக்கடனுக்கு மகன்களோடும், மகளோடும் கூடிச்செல்ல வேண்டும் என்று கூறியிருந்தாரே! இப்பொழுது சம்பந்தி வீட்டார் யாருமே இல்லாமல் எங்களுடைய ஈமக்கடன்கள் நடக்கப் போகின்றதே' என்றும்,

'குருதேவரே, உங்களின் சூரிய குலம் என் மகள் வயிற்றில் பிறக்கப் போகும் வாரிசுகளால் தான் வலிமையும், வல்லமையும் பெற்றிடவேண்டுமென்று நீங்களே முடிவு கட்டிவிட்டீரா? அரக்கர் குலமும் சூரிய குலமும் ஒன்றாகித் தான் இந்த யுகம் முடியவேண்டுமா? சூரிய குலத்தில் காவிரிச் சோழர்குலத்துப் பெண்ணோ, அல்லது சந்திரகுலத்து வைகைக்கரைப் பாண்டியனின் பெண்ணோ கங்கைக்கரைச் சூரிய குலத்திற்குக் கிடைக்குமாறு செய்திருக்கக் கூடாதா? எங்கள் மகள் பதினான்கு ஆண்டு காலம் வனவாசம் முடித்தாலும் வாழ்வு பெற முடியுமா? அரக்கர் மகளே சீதையென்பதை அறிந்தால் அயோத்தி இராமன் அவளோடு குடும்பம் நடத்துவானோ? என்றும்,

'தன் மகள் சீதைக்கு வனவாசத்தில் ஓய்வுதரவே அரக்கர்கோன் தன் மகளைத் தேரேற்றிக் கொணர்ந்தான், ஆனால் விதியாக, ஊழாக அவளே மாறிவிட்டாள் இதைத்தடுத்திருக்கக் கூடாதா குருதேவரே? இதைத் தவிர்த்திருக்கக் கூடாதா குருதேவரே? முக்காலமும் உணர்ந்த குருதேவரே எங்களைக் காக்காமல் விட்டது ஏன்?' என்றும்,

'அரச குலத்தையே வேரோடு அழிக்கிறேன் என்று புறப்பட்ட பரசுராமர் தசரதன் மகன் இராமன் திருமணம் செய்து கொண்டு திரும்புகின்றான் என்றவுடனேயே அவன் அயோத்தி சென்று முடி சூட்டிக்கொள்ளும் முன் கொன்றுவிட வேண்டுமென்று ஓடினார் ஆனால் தசரதன் மகன் இராமன் ஓர் அரக்கர் குலப் பெண்ணை மணந்திருக்கிறார் அதனால் தோன்றப் போகும் வாரிசு அரச குலமாக இருக்காது என்பதையுணர்ந்தே அவனைக் கொல்லாமல் விட்டு விட்டார் அரக்கர்கோன் மகளே சீதை என்பதைத் தன்னைக் கண்டு அஞ்சாமல் ஏறிட்டு நோக்கிய சீதையின் பொலிவால் புரிந்திட்ட பரசுராமரே இலங்கையர்கோன் மருமகனுடன் வில்வித்தை விளையாட்டுக்களை வேடிக்கையாகச் செய்தார். அந்தச் செய்தி கேட்டும் நான் என் மகள்தான் சீதையென்பதை புரிந்து கொள்ளாமல் போய்விட்டேனே' என்றும்,

'இலங்கையர் கோன் இறுதிப் போருக்கு முன்னாலாவது சீதையிடம் அவள் தன் மகள்தான் என்று கூறியிருக்கக் கூடாதா? அல்லது என்னிடமாவது உன் மகள் தான் சீதையென்பதை கூறியிருக்கக் கூடாதா? என் மகள் சீதையையே போர் முகத் திற்கு அனுப்பியிருப்பேனே, அவளே தசரதன் மகனிடம் அவனது முறையற்ற போர் களால் தன் தம்பிகளும், சின்னையாவும் (சித்தய்யா, சித்தப்பா...... என்ற பாட வேறு பாடுகள் உண்டு இந்த சின்னையா என்ற சொல்லுக்கு) மாண்டது போதுமென்று கூறி தன் தந்தையையும் தாயையும் வந்து பார்க்குமாறு தன் கணவனை அழைத்து வந்தி ருப்பாளே! இலங்கையின் அரசையே இராமனுக்குச் சீதனமாகக் கொடுத்திருப்பாரே என் கணவர் இலங்கையர்கோன்' என்றும்,

—தொடர்ச்சி 6-ம் பக்கம்

தொடர்பு:- தலைமைப் பொறுப்பாளர், சி. கவிக்குமார் B. Sc.,
56, N.G.O. காலனி, பொன்னேரி-601204.

# நிருவாண நிலையே நிவாரண நிலை

நிரு + ஆணம் (ஆவணம்) = நிலையாக அல்லது இயற்கையாக + ஆவணம் —> ஆணம் = உறுதி நிலை = நிருவாண நிலை = பிறந்த மேனியோடு இருத்தல் எனும் பொருள்படும் அழகிய் தமிழ்ச் சொல்லே **நிருவாணம்.**

நீவு + ஆரணம் —> நீவு = மென்மையாகத் தடவிச் சரிசெய்தல் = ....... எதையும் மென்மையாகப் பக்குவப் படுத்தல்; ஆரணம் = யானை = அழகுபடவும், வலிமை மிகுந்திருக்கும் படியாகவும் செய்திடல் = —> எல்லாவிதமான குறைகளுக்கும் தொல்லைகளுக்கும் மென்மையான அன்பு வழியில் பரிகாரம் செய்தல் எனும் பொருள் தரும் அழகிய தமிழ்ச் சொல்லே நீவு + ஆரணம் = **நிவாரணம்**]

இந்தச் சொல்லாராய்ச்சி விளக்கத்தோடு **பிச்சை இடும் ஆண்டவர் (ஆண்டை) —> பிச்சாண்டவர்** என்ற சொல் குறிக்கும் தத்துவமும் சிலையும் பற்றி இங்கு சுருக்கமான விளக்கம் தரப்படுகிறது. ஏனெனில் குருபாரம்பரியத்தில் ஆரம்ப காலத்திலிருந்து எண்ணற்ற கருத்து விளக்கங்கள்; செயல்நிலை விளக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. விரிவஞ்சிச் சுருக்கமான விளக்கம் இங்கு தரப்படுகிறது.

**கலியுகம்** பிறந்து **1359 ஆண்டுகளுக்குப்** பிறகுதான் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள் இமயமலையின் கைபர், போலன் **கணவாய்களின்** வழியாக ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு மேய்ச்சல் நிலம் தேடி ஆட்டுத்தோலால் ஆன கோவணத்தையும், குடுமியையும் உடமையாகக் கொண்டு கையில் கோலும், தலையில் குடுமியுமாக இந்தியாவிற்குள் வந்தார்கள். இந்த நாகரீகமற்ற நாடோடிக் கும்பல்களால்தான்; இந்திய நாட்டின் நாகரீகத்தின் காப்பகமாக விளங்கிய **'அருட்பா நகரம்' (அரப்பா நகரம்), 'மோகம் சிதரு நகரம்' (மொகஞ்சதோரா நகரம்)** என்ற இரண்டு நகரங்களும் அழித்தொழிக்கப்பட்டன. அதற்கு மேல் இவர்கள் இந்த நாட்டிலேயே நிலையாக வாழ வேண்டுமென்பதற்காக; இந்த நாட்டவர்களின் மொழியான அமுதத்தெய்வத் தமிழ்மொழியின் அடிப்படையில் தங்களுடைய எழுத்து வழக்கற்ற பேச்சு மொழியை இணைத்து ஒரு புதிய மொழியை உருவாக்க விரும்பினார்கள். அதற்கு அப்பொழுதிருந்த சித்தர்கள் உதவி செய்து **'தமிழுக்குச் சமமான மொழி'** எனும் பொருள்பட **(சம எனும் தமிழ்ச் சொல்லும், கிருதம் (= செய்யப்பட்டது) எனும் வட ஆரியப்பேச்சு மொழிச் சொல்லும் இணைந்து சம + கிருதம் = சமசுக்கிருதம்)** சமசுக்கிருதம் எனும் மொழியை உருவாக்கிக் கொடுத்தார்கள். அத்துடன் தமிழ்மொழியிலிருந்த பல இலக்கிய இலக்கணங்களில் பெரும்பாலானவற்றை இந்தச் சமசுக்கிருத மொழியில் மொழிபெயர்த்துத் தந்தார்கள். ஆனால், பேராசை பிடித்த இந்த வட ஆரியர்கள் தமிழ் மொழியிலுள்ள அருளூறு இலக்கிய இலக்கணங்களில் பெரும்பாலானவற்றை பொருள் தெரியாமலே அப்படியே மொழித்திருத்தம், மொழியாக்கம் (Transliteration and Translation) செய்து பதினெண் சித்தர்களின் சித்தர் நெறியான சீவ நெறியெனும் இந்துமதத்தையே தங்களுக்குரிய ஹிந்து மதமாக்கிக் கொண்டார்கள். குறிப்பாக 'பூசாமொழி' என்ற பெயரில் பூசைகள் ஓதுவதற்காகவும், பிற நடைமுறைகளுக்காகவும் எழுதப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அனைத்து வகையான அருளூறு வாசகங்களையும் சமசுக்கிருத மொழியில் மொழித் திருத்தம் செய்து மாபெரும் தோல்வியைப் பெற்றிட்டார்கள்.

[[redacted]]

## நிருவாண நிலையே நிவாரண நிலை

3-ஆம் பக்க தொடர்ச்சி

**எனவே தான், சமசுக்கிருத மொழியில் செய்யப்படும் பூசைகளின் மூலம் யாருக்கும் சத்தியோ, சித்தியோ கிடைத்ததாக வரலாறு இல்லை. இன்னும் சொல்லப் போனால் சமசுக்கிருத மொழியில் பூசை செய்கின்ற யாருக்கும் அருளும் வருவதில்லை, மருளும் வருவதில்லை.**

இப்படிப் பிருமணர்கள் சமசுக்கிருத வெறி கொண்டு செயல்பட்டுத்தான் உயிர்த்துடிப்பும் பயன்மிகுதியும் உடைய பதினெண் சித்தர்களின் மெய்யான இந்து மதத்தை உயிரற்ற பயனற்ற ஹிந்து மதமாக்கி விட்டார்கள் அந்த தீயவிளைவுகளுள் ஒன்று தான் பிச்சாடனர் சிலையின் தத்துவ விளக்கம் புரியாமல் போனது.

I. பிச்சை + ஆளுநர் —> பிச்சாடனர் = பிச்சை வழங்குவதில் வல்லமையுடையவர்

II. பிச்சை + ஆண்டை —> பிச்சாண்டை = பிச்சை வழங்கும் கலைக்கு ஆண்டே (தலைவர்)

III. பிச்சை + ஆண்டவர் —> பிச்சாண்டவர் = பிச்சை வழங்கும் கலையில் முழுமை பெற்றவர்.

விளக்கம்;-

இப்படியாகச் அருட்பிச்சையும் பொருட்பிச்சையும்; விண்ணுலக இன்பமும்; மண்ணுலக இன்பமும்; அக இன்பமும் புற இன்பமும் வழங்குகின்ற வல்லமையைப் பெற்ற முழுமுதற் பரம்பொருளாக விளங்குகின்ற பதினெண் சித்தர்களின் தலைவராக இருக்கின்ற 'சீவனரின்' (சிவனரின்) அருள் வழங்கு வடிவமே இந்தப் பிச்சாடனரின் வடிவம்.

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் இந்துமத மறுமலர்ச்சிககாகவும், மெய்யான இந்துமதத்தின் விழச்சி நிறை செழிச்சிக்காகவும் வார்த்திட்ட எண்ணற்ற சிலைகளுள் 'ஐந்து வகையான பிச்சாடனர்கள்' என்று வார்த்த ஐந்து வகையான சிலைகளுள் ஒன்றே இது. இவை கைகளின் நிலைகளாலும், கைகளிலுள்ள ஆயுதங்களின் நிலைகளாலும், தோற்றப் பொலிவாலும் ஐந்து வகையான வேறுபட்ட நிலைகளை உடையவையாகும் நகாரச் சிலை, மகாரச் சிலை, சிகாரச் சிலை, வாகாரச் சிலை யகாரச் சிலை எனும் ஐந்து வகை பிச்சாடனர்கள் வார்க்கப் பட்டார்கள். அதில் இது மகராச் சிலை என்ற பிரிவைச் சேர்ந்ததாகும். விரிவஞ்சி இவ்வளவில் நிறைவுசெய்கிறோம்.

குறிப்பு: குருவும் மாணக்கனும் நிருவாண நிலையில் இருந்துதான் அருள் உலக நாளோலகத் திருவோலக்க ஆட்சி நிகழ்த்த முடியும் என்பதே இச்சிலையின் விளக்கம். திரிசூல நிலையும், அருட்கை நிலையும், முகமும் மகார நிலையை விளக்குகின்றன.

ஆதாரம்:— பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் குருபாரம்பரியம்; கருவூர்த் தேவரின் குருபாரம்பரியம்; மூவரின் இலக்கிய பாரம்பரியங்களிலும் இப்பிச்சாடனரின் விளக்கங்கள் காணப்படுகின்றன.

([redacted])

# ஐந்தொழில் வல்லான் நிலை - 2

இப்படி இடையருது முயன்றும் கூடப் பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்கள் தங்களுடைய சமசுக்கிருத வேத புராண இதிகாசங்களை துணை வைத்துக் கொண்டு தொடர்ந்து தவருன கருத்துக்களையே பரப்பி வருகிருர்கள். இதனுல், மெய்யான இந்துமதத்தில் கலக்கங்கள், குழப்பங்கள், மயக்கங்கள், தேக்கங்கள், முடக்கங்கள், அடக்கங்கள், ஒடுக்கங்கள், நடுக்கங்கள் தவருன திசை திருப்பல்கள், பயனற்ற கற்பனைகள் முதலியவைகள் வளர்ந்து பொதுவாகவே இந்து மதம் என்ருல் பயனற்றகற்பனைகளும், பொய்க்கதைகளும், புரியாமைகளும் அறியாமைகளும் நிறைந்த ஒன்று என்ற கருத்து நிலைபெறும்படிச் செய்துவிட்டார்கள் எனவேதான் சில ஆயிரம் பக்கங்களில் எழுதி வைத்திருக்கும் இந்த நடராசர் சிலைப் பற்றிய விளக்கங்களின் சாரமாக இந்தக் கருத்துக் குறிப்பு வெளியிடப்படுகிறது

இந்த நடராசர் சிலை 'ஐந்தொழில் வல்லான் சிலை' என்றே ஏடுகளில் சிறப்பாகக் குறிக்கப்படுகிறது. அதாவது, இறைவனுக்குரிய ஆக்கல், அழித்தல், காத்தல், அருளால், மறைத்தல் என்ற ஐந்தொழில்களின் விளக்கமாகத் தான் இந்த ஆடல்வல்லான் சிலை உருவாக்கப்பட்டது.

1. வலக்கையில் உள்ள உடுக்கைஒலி = ஆக்கல் தொழிலை விளக்குகிறது.
2. இரண்டாவது வலதுகையின் வாழ்த்துகின்ற தோற்றம் = காத்தல் தொழிலைக் குறிக்கிறது.
3. மேல் இடக்கையில் உள்ள சுடர் நெருப்பு = அழித்தலைக் குறிக்கிறது.
4. கீழ் இடக்கையும், முயலகனை மிதிக்கும் வலதுகாலும் மறைத்தலைக் குறிக்கிறது.

குறிப்பு:- கீழ் இடக்கை மட்டும் தான் மறைத்தலைக் குறிக்கின்றது என்றும், முயலகனை மிதிக்கும் வலதுகால் கொடியனவற்றை ஒடுக்குதல் என்ற தத்துவத்தைக் குறிக்கின்றது என்றும் பதினெண்சித்தர்களின் வாக்குகளிலும், வாக்கியங்களிலும், வாசகங்களிலும், நான்மறைகளிலும், மிகத் தெளிவாக குறிக்கப்படுகின்றன. அதாவது நமசிவாய என்ற ஐந்தெழுத்து; நமச்சிவாய என்ற ஆறு எழுத்தாக் வடிவப்படும் போது இந்த நடராசர் ஆறு வகை இறைமைச் செயல் நிலைவிளக்கத்தை வழங்குகிறது.

5. இடக்காலின் தூக்கிய திருவடி அருளுதல் எனும் தத்துவத்தை விளக்குகிறது இந்த இடக்கால் 'தூக்கிய திருவடி' அல்லது 'குஞ்சித பாதம்' எனப்படும். வலக்கால் 'அனைத்தையும் ஒடுக்கி மறைக்கின்ற ஆடிய பாதம்' எனப்படும். அதாவது இந்த பாதம் 'ஆடி ஓய்ந்து கீழே நிற்கின்ற பாதம்' எனப்படும். சிறப்பாக, முயலகனின் (அரக்கன்) ஆட்டங்களை எல்லாம்'அடக்கியபாதம்', 'ஒடுக்கியபாதம்', அவனுல் விளைந்த அச்சங்களையெல்லாம் மறைத்த பாதம் அல்லது 'அழித்தபாதம்' எனப்படும்.

இப்படி 1. ஆக்கல் 2 காத்தல் 3. அழித்தல் 4. ஒடுக்குதல் அல்லது மறைத்-தல் 5. அருளல் என்று 5தொழில்களைச் செய்யும் இறைவனின் நிலையை விளக்கும் இந்த நடராசர்சிலை 'ஐந்தொழில் வல்லான் சிலை' அல்லது ஐந்தொழில் வல்லான் நிலை' என்று சிறப்பிக்கப்படுகிறது.

(தொடரும்)

2ம்பக்கதொடர்ச்சி சித்தர்ராமாயணம்

'குருதேவரே, என் கணவர் தன் மகன்கள் மாண்டபோதும் கூட மருமக -னுக்கு அழிவு வந்துவிடக்கூடாதே என்றெண்ணியே தம்பியை அனுப்பி மருமகனைத் தூக்கிவரச் சொன்னாரே! இன்று மருமகனாலேயே மாண்டுபோனாரே' என்றும்.

'குருதேவரே, மாண்டுகிடக்கும் எம் மன்னவனை, தென்னவர்கோனை, மாவி -லங்கை வேந்தனை நன்றாகப் பாருங்கள். இறப்பின் அச்சமோ, எதிரி மீது கோப மோ இல்லாமல் அன்றலர்ந்த தாமரைபோல் புன்னகை பூத்துக் கிடக்கின்றாரே! மானுடனால் தனக்கு மாய்வுண்டென்று எண்ணாமலும், மருமகனால் தனக்கு மாய்வு வந்துவிடாது என்று எண்ணாமலும் மலர்ந்த முகத்தோடு விளையாட்டாகவே போர்புரிந்த மூவுலகும் வென்ற வேந்தனை; மூவரும் பிறரும் போர்புரிய அஞ்சும் அரக்கர் கோனை, வினையாக, வினையமாக, சூழ்ச்சியாக முறையற்ற முறையில் போர் புரிந்து வீழ்த்திவிட்டானே தசரதன் மகன், ஐயோ! என் நாயகன் ஆருயிர் நிலையை அரக்கர் குலக்கோடாரி வீடணன் பேராசையால் விளம்பியதால் தானே தசரதன் மகன் வெற்றிபெற்றானே! என் கணவர் வீழ்ந்துபட்டாரே' என்றும்,

''குருதேவரே! நீங்களாவது என் மகள் சீதைக்கோ, மருமகன் இராமனுக் கோ எங்களுடைய உறவு நிலைகளை, உரிமை நிலைகளை புதிய பந்தபாசம் உருவாகும் படி விளக்கி விளம்பியிருக்கக் கூடாதா? என்றும்,

''குருதேவரே! வசிட்டருக்கும், விசுவாமித்திரருக்கும் உருவான போட்டா போட்டிச் சண்டைச் சச்சரவுகள் அரிச்சந்திரனோடு நின்றிருக்கக் கூடாதா?' வசிட்டர் குருவாக இருக்கும் சூரிய அரசகுலத்தோடு மூவுலகமாளும் அரக்கர்கோனின் மகளை இணைத்து மாபெரும் நாடகமாடி அரக்கர் குல அழிவையும், அரசகுலப் பழியையும், இழிவையும் உருவாக்கித்தான் விசுவாமித்திரர் நிறைவு காண வேண்டுமா? வசிட்டர் காத்த அரச குலத்தை பழிக்கும், இழிவுக்கும் நலிவுக்கும் உரியதாக்கித் தன்னு டைய வெற்றியை அரிச்சந்திரனையும் கடந்து அயோத்தித் தசரதன் மகன வாழ்வி லும் நிலைநாட்ட வேண்டுமா? தாங்கள் விரலசைத்திருந்தாலோ, கண்பார்வை காட்டி யிருந்தாலோ இந்த விசுவாமித்திரர் தன்னுடைய விபரீத விளையாட்டை நிறுத்திக் கொண்டிருக்கமாட்டாரா? ஏன் எங்களைக் காக்கத் தவறிவிட்டீர்கள் குருதேவரே?' என்றும்,

'குருதேவரே! வசிட்டரை முழுமையாகத் தோற்கடிக்கவும், அரக்கர் குலத்தை முழுமையாக அழிக்கவும் திட்டமிட்ட விசுவாமித்திரன் அயோத்தித் தசரதனுக்கும் அறிவிக்காமல், மிதிலைச்சனகனுக்கும் புரிவிக்காமல், தசரதன் மகன் இராமனுக்கும் தெரிவிக்காமல் மூவுலகாளும் இலங்கையர் கோன் மகளை சூரியகுல அரசகுமார னுக்குச் சூழ்ச்சியாகத் திருமணம் செய்துவிட்டானே! இந்த விசுவாமித்திரன் என் சாபத்திற்கு ஆளாகாமல் போய் விடுவானா! இவன் எம்முறைக்கும் அயோத்தி இராமனின் முடிவுக்கு உரியவனாக எல்லாப் பிறப்புக்களும் பிறக்கட்டும். இவன்தன் குறிக்கோளுக்காக அனைவரையும் வேட்டைப் பொருளாக ஆக்கியதால் இவன் வேட்டைக்காரனாகவே பிறப்புக்கள் எடுத்து அலைந்து திரியட்டும். குருவாக விளங்கும் இவன் குருவின் கோபதாகங்களுக்கும், சாபங்களுக்கும் உரியவனாகவே பலபிறப்புக் -களெடுக்கட்டும்,' என்றும்,

-தொடரும்

# சைவ சித்தாந்த சாத்திரங்களே மெய்யான இந்துமத சாத்திரம்

அடுத்து, மாபெரும் இடிபோல் பிற்காலச் சோழப் பேரரசு பற்றிய எமது ஆங்கில நூல்களையும், தமிழ் நூல்களையும் வெளியிட உள்ளோம். அவற்றுள், The Fall and Rise of the Tamils, The Rise and Fall of the Tamils, The Religious Renaissance of the Later Cholas, The Renaissance of the Tamil literature during the later Chola period, The sharp note on the Later Chola dynasty, The heriditary of the Indu Gods, The divine theory of the Tamil polity, The temple Science of the later Cholas, The Revolution of the Arts in the later Chola period... ..... என்ற நூல்கள் குறிப்பிடத்தக்கவை. இவை யெழுதுவதற்காக, இந்தத் தலைப்புகளில் யாம் தொகுத்து வைத்துள்ள 'தமிழ்க் குறிப்புக்கள்' (The collections of informations and particulars in Volumes) என்பவை குறிப்பிடத்தக்கவை. இவை பல தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டு பல நகல்கள் எடுக்கப்பட்டு பல நண்பர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

இந்தக் குறிப்புக்களைத் 'தமிழின வீழ்ச்சியும் எழிச்சியும்' 'தமிழின எழிச்சியும் வீழ்ச்சியும்' 'தமிழ்ப் பாண்பாட்டு எழிச்சியும் வீழ்ச்சியும்', 'தமிழ்ப் பண்பாட்டு வீழ்ச்சியும் எழிச்சியும்', 'தமிழக அரசியல் தத்துவத்தில் தெய்வீகக் கொள்கை', 'இந்து மதக் கடவுள்களின் பாரம்பரியம்' 'பிற்காலச் சோழப் பேரரசில் இலக்கிய மறுமலர்ச்சி' ...என்று சில குறிப்பிட்ட தலைப்புக்களின் கீழேயே வகுத்துப் பகுத்துத் தொகுத்துச் சென்றிருக்கிறோம் யாம். ஏனென்றால், யாம் எழுதிய நூல்களனைத்தும் வெளிவரா விட்டாலும் எனக்கு விவரம் தெரிந்த இளமைப் பருவத்திலிருந்து யாம் சேகரித்து வைத்து விடுச் செல்லும் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் மட்டும் 20,30 தொகுதிகளாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிட்டால்தான் தமிழின விடுதலைக்குத் தேவையான தமிழ்மொழி வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு (The History of the Tamil Language and Literature), தமிழ்ச்சமுதாய வரலாறு (The Social History of the Tamils), தமிழ் பண்பாட்டு நாகரீக வரலாறு (The History of the Tamil culture and Civilization), தமிழ் அரசியல் வரலாறு (The History of the Tamil polity or the political History of the Tamils), தமிழரின் சமய வரலாறு (The Religious History of the Tamils), பதினெண் சித்தர்கள் தரும் உலக வரலாற்றுச் செய்திகள் (The Contributions of the Pathinen siddhars to the History of the World), பதினெண் சித்தர்களின் தத்துவமும் சித்தாந்தமும் (The philosophy and the Theology of the pathen siddhars), பதினெண் சித்தர்களின் சமயவிஞ்ஞானம் (The Religious science of the pathinen siddhars), பதினெண்சித்தர்களின் சமுதாய விஞ்ஞானம் (The social science of the pathinen siddhars), பதினெண் சித்தர்களின் கோயில் விஞ்ஞானம் (The Temple Science of the pathinen siddhars),...... முதலிய நூல்கள் எல்லாம் உருவாக்கிட முடியும், உருவாக்கிட முடியும், உருவாக்கிட முடியும். அல்லது இந்தத் தலைப்புகளில் எல்லாம் சிந்திக்கக்கூடிய ஆற்றலைப் பெற்ற தலைவர்கள் தமிழினத்துக்குக் கிடைத்திடுவார்கள். இல்லாவிட்டால் கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் தமிழினத்திற்குக் கிடைத்த பெரும்பாலான தலைவர்கள் தற்குறிகளாகவும், தான் தோன்றிகளாகவும், அரை குறைப்படிப்பாளிகளாகவும், சிந்திக்க மறுத்த குருடர்களாகவும், பிறரோடு கலந்து பழகத்தெரியாத திருடர்களாகவும், அடிதடி நிகழ்த்தும் முரடர்களாகவும், முதலாளித்துவ கைக்கூலிகளாகவும், கள்ளச்சந்தைக்காரர்களின் சொந்தக்காரர்களாகவும், கொள்ளைக்காரர்களின் கூட்டாளிகளாகவும், வறட்டுத் தத்துவவாதிகளாகவும், முரட்டுப்பிடிவாதக்காரர்களாகவும், அன்னியர்களின் கங்காணிகளாகவும், பதவி வெறியர்களாகவும், புகழ் வெறியர்களாகவும், பேராசைக்காரக் கூலிக்காரர்களாகவும் ..... வாழ்ந்திட்டது போலவே, வருங்காலத் தமிழினத் தலைவர்களும் வாழ்ந்திடுவர்.

(தொடரும்)

# அன்புள்ள சேவுகனுக்கு .............!!!

**நமது தேக்க நிலேக்குக் காரணம் நம்மவர்களின் பக்குவமின்மையா?!**

**'இலக்காட்சியினரின் தோல்விக்குக் காரணம் குருவழிச்செயல்படாமையே'**

அன்புச்சேவுக!

உலகியலுக்குத் தெரிந்த வரலாற்றுப்படி இலக்காட்சியினர் (இலக்கு + ஆட்சியாளர் —> இலட்சியவாதிகள், சமசுக்கிருதத்தில்) கடுமையான சோதனைகளே -யும் கொடுமையான செயல்களேச் செய்ய வேண்டிய இன்றியமையாத நிலேகளேயும் அடைந்து வந்திருக்கிறார்கள், என்பதே உண்மை. அப்படியல்லாமல், எதிர்பாராமல் எளிமையாகப் புகழும், பதவியும், பொருளும் ஈட்டியவர்கள் மெய்யான சாதனைகளேச் சாதித்தவர்களாக மாட்டார்கள். மேலும், இவர்களுடைய சாதனைகள் நிலேத்த வடிவையோ, வாழ்வையோ, பயனேயோ நல்கியவையானதில்லே.

நாரர், சிவன், திருமால், பிறமண்......முதலியவர்களின் வாழ்க்கை வரலாறு -களே விஞ்ஞான நோக்கிலும், பகுத்தறிவுப் போக்கிலும் விளக்கியுரைக்கும் மாபெரும் கருத்துப் புரட்சியின் மூலம்தான் படிப்படியாகச் சமயம், சமுதாயம், அரசியல் மறு மலர்ச்சிகளே விளேவிக்க முடியும். அதனுல், **நமது எல்லே சமயம்தானு?!...** அல்லது இது கடந்து சமுதாயம், அரசியல்... என்ற எல்லா எல்லேகளுக்கும் செல்ல வேண்டுமா? என்பதைச் சிந்தித்து விவாதித்து முடிவெடுக்க வேண்டும், நாம்.

முருகன் பாலகப் பருவம் கடக்கும் முன்னரே தாய்தந்தையரின் போக்கை விமர்சித்துத் தன் போக்கில் முடிவெடுத்து அதனேச் செயலாக்கினுன் என்பதையும்; இராமன் தன் மனேவி என்ற பந்த பாசங்களேக் கடந்து சீதையை நெருப்பில் நீராடவும், கொலேத் தண்டனேக்குரியவளாக்கிடவும் முற்பட்டான் என்பதையும்; கண்ணன் ஒரு பக்கமும் சார்பின்றிச் சமாதானத்துக்காகப் பஞ்சபாண்டவர்களுக்காக ஐந்து வீடுகளாவது கேட்டும் தோல்வி கண்டதால் அனேவரையும் அழித்தொழிக்கப் பாரதப் போர் நிகழ்த்தினுன் என்பதையும்; மகாவீரர், புத்தர், ஏசு, நபி நாயகம், காலடி ஆதி சங்கரர், அறுபத்து மூன்று நாயன்மார்கள், பன்னிரண்டு ஆழ்வார்கள், பட்டினத்தார், அருணகிரியார், தாயுமானவர், சீர்காழி வள்ளல், சந்தானுச்சாரியார்கள், இராமலிங்கர்,..... முதலியோர் அனேவருமே மிகுந்த மனவலிமையோடும், சிந்தைத் துணிவோடும், சொந்தபந்தப் பாசங்களேப் போரிட்டு முறியடித்து வென்றுதான் புதிய சாதனேகளேச் சாதித்திருக்கிறார்கள் என்பதையும நம்மவர்கள் முறை -யாகவும் நிறையாகவும் தெரிந்தாராய்ந்து புரிந்து கொள்ள முடியாத காரணத்தால் தான் நமது நிலேகளில் தேக்க நிலேகளும், தொய்வு நிலேகளும், மந்த நிலேகளும் மிகுந்திருக்கின்றன. அதாவது, இலக்காட்சியினர் சூழ்நிலேகளோடு தீரத்தோடும் வீரத்தோடும் கடுமையாகப் போரிட்டு வெற்றி தோல்வி பற்றிக் கவலேயின்றித் தியாகங்களேச் செய்திட்டால்தான் எதையாவது சாதித்தவர்களாகிட முடியும். அப்படிப்பட்டவர்கள் நம்மிடையில் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவினராவது உள்ளனரா?

நம்மவர்களில் உலகியலாகப் பணமோ,பதவியோ,செல்வாக்கோ உள்ளவர்கள் தாங்கள்தான் இயக்கத்தையே நடத்துவதாக எண்ணிக் குருவழிச் செயல்படாமல் செயல்படுவதால் தேவையில்லாத தேக்க தூக்க நிலைகளும், சிதைவுச் சீரழிவு நிலைகளும் உருவாகுகின்றன. இதேபோல், ஊழ்வினையாலும் விதியாலும் பயிற்சி முயற்சியாலும் ஓரளவு அருட்சத்திகளையும், சித்திகளையும் பெற்றவர்கள் தங்களால் விளைகின்ற அற்ப சொற்பச் சாதனைகளையெல்லாம் எண்ணித் தாங்களே அனைத்தும் என்ற மாயைக்கும். அகம்பாவ ஆணவங்களுக்கும் உள்ளாகிடுகிறார்கள். இதனால், இவர்கள் குருவழிச் செயல்படாமலும். இந்துமத வரலாற்றுப் பேருண்மைகளை எண்ணிச் செயல்படாமலும், தங்களால் அருளுலகில் மலர்ச்சியும் வளர்ச்சியும் புதிய தோற்றங்களும் பயன்களும் விளைவதாக எண்ணி இறுமாப்புக்கொண்ட தான்தோன்றிகளாகி விடுகிறார்கள். இருந்தாலும் குருவின் அருள் உள்ளம் அனைவரின் அகஇருளையும் புற இருளையும் அகற்றும் பணியில்தான் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. இதனைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்பட்டேயாக வேண்டும், நம்மவர்கள்.

பறவையின் குஞ்சுகள் முட்டையை உடைத்துக் கொண்டு வெளியே வருவது போலப் புதியன சாதிக்க விரும்புகிறவன, தன்னைச் சுற்றியுள்ள அனைத்து விதமான சொந்த பந்தப் பாசக் கட்டுப்பாடுகளையும், மற்ற சமூக சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும் முட்டிமோதிப் போரிட்டு உடைத்தெறிந்து விட்டுத் தியாகச் செம்மலாகப் புரட்சி வாழ்வை மேற்கொண்டேயாக வேண்டும். அதற்காகத் தனிமனித வாழ்வில் பழியையும் இழிவையும், அழிவையும் இழப்பையும் ஒரு பொருட்டாக எண்ணாமல் வீரதீரப் போரில் விழுப்புண்கள் தாங்கிப் போராட்ட வாழ்வு வாழத் தயாராக இருப்பவனே பக்குவம் பெற்றவனாகக் கருதப்படுகின்றான். இத்தகையவனாலேயே ஆக்கச் சாதனைகளுக்குரிய ஊக்க உணர்வையும், தலைவனாகிய குருவழியே செயல்படக்கூடிய தரத்தையும், திறத்தையும் பெற்றிட முடியும். பெற்றிட முடியும், பெற்றிட முடியும். இந்த நிலையினைப் பெற்றவர்கள் நம்மில் எத்தனை பேர்? எத்தனை பேர்? எத்தனை பேர்?—— என்று நடுநிலையில் நின்று சிந்தித்தால்; **நமக்குத் தோல்வி நம்மவர்களாலேயே!' 'நமது தேய்நிலைகளுக்கும் ஓய்நிலைகளுக்கும் காரணம் நம்மவர்களின் ஓயாத மாயா நிலைகளே காரணம்'** என்பது விளங்கிடும். அதாவது. நம்மவர்களுக்கிடையில் தன்னையறிந்தோ அல்லது தலைவனைப் புரிந்தோ செயல்படாது,தான்தோன்றித் தனமாகச் செயல்படுபவர்களின் எண்ணிக்கை மிகுதியாக இருப்பதன் காரணமாகத்தான் அனைத்து வகையான தூக்க, தேக்க, முடக்க நிலைகளும் வளர்ந்து வருகின்றன. இனியும் இது கூடாது. இந்த 1986-ஆம் ஆண்டு டிசம்பர் மாத குருதேவர் அறிக்கையோடு 36 புத்தகங்களில் நமது கொள்கை விளக்கம் வரலாற்றுப் பூர்வமாக இலக்கியச் சான்றுகளோடும், தத்துவ ஊன்றுகளோடும் குறிப்பிடத்தக்க வளர்ச்சிகளைக் கடந்து பருவமடைந்து பக்குவப்பட்டு விட்டது. எனவே. நம்மவர்கள் இந்த 36 அறிக்கைகளையும் மாதமொருமுறை முழுமையாகத் திருப்பித் திருப்பிப் படித்துக் கொண்டு விட்டால் போதும்; பாடி வீடுகளும் பாசறைகளும் முழுமை பெற்றுவிடும்.

அன்பு — குவலய குரு பீடம், அருளாட்சி நாயகம், குருமகா சன்னிதானம்,
ஞாலகுரு சித்தர் கருவூரார்.

# இந்தியாவில் மார்க்சீயம் - 18

—சித்தர்

டாக்டர்கள் இவருடைய செறிமானக்குடல் பகுதிகளில் புற்றுநோய் இருப்ப தாகக் கண்டறிந்தார்கள். இவருடைய நோய் கடுமையாயிற்று செயலற்றுப் படுத்த படுக்கையானர். இறுதியாக நீண்டதொரு தோழமையை விளக்கிக் காட்டி கொண்டி -ருந்த அந்த விளக்கு 1895 ஆகசுட்டு 5-ஆம் தேதி இரவு 10-30 மணிக்கு (பிரடெரிக் எங்கல்சு) ஒளியிழந்தது.

உலகெங்கிருந்தும் எங்கல்சின் நண்பர்கள், தோழர்கள், தொண்டர்கள், ஆதர வாளர்கள் இறுதிச் சடங்குக்கு வந்தார்கள். 'மார்க்சு வாழ்ந்த காலத்தில் நான் பக்க வாத்தியம் வாசித்தேன். இதில் எனக்குத் தூய தன்மை கிட்டிவிட்டது என்று நினைக் கின்றேன். எனக்கு மார்க்சு போன்ற சிறந்த முதல் வாத்தியம் இருந்தது பற்றி நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். என்று கூவிய அந்த எங்கல்சின் வாசிக்க முடியாமல் கிடக்கும்அவ்வுடலைக்காண வந்தனர்.

எங்கல்சின் விருப்பப்படி அதாவது, அவர் உயிலில், தன்னுடைய எழுதி வைத்தபடி அவருக்கு விருப்பமான ஓய்விடமான இங்கிலாந்தின் தென் பகுதி யில் உள்ள 'ஈசுட்போர்னின்' பாறைக் கரையையொட்டியுள்ள கடலுக்குள் அவரது சாம்பல் கலசம் இறக்கப்பட்டது. இப்படிப்பொதுவுடமை தத்துவத்தின்பிறப்பும் வளர்ச் சியும் இருபெரும் மூதறிஞர்களால், மாமேதைகளால். சிந்தனைச்சிற்பிகளால் நிகழ்ந் திட்டது.எங்கல்சு மிகமிகப் பெருந்தன்மையுடன் தன்னுடைய ஆசானும் நண்பனுமான காரல் மார்க்சுக்கு பொதுவுடமைத் தத்துவத்தை ஈன்றெடுத்த எல்லாப் பெருமைகளை -யும் காணிக்கையாக்குகின்றார். ஆனால் எங்கல்சினுடைய உய்த்துணர்வு, ஆற்றல், அறிவாற்றல், உணர்வு ஆற்றல், எண்ண ஆற்றல், சிந்தனையாற்றல், பேச்சாற்றல், எழுத்தாற்றல்...... முதலிய அனைத்தும் சேர்ந்துதான் கார்ல்மார்க்சையும் அவரது கருத்தையும் வாழவைத்தன என்று கூறினால் அது மிகையாகாது. இதைச் சற்று நேரடியாகவும், வெளிப்படையாகவும், கூற வேண்டுமேயானால் எங்கெல்சு இல்லா விட்டால் கார்ல் மார்க்சு உயிருடன் வாழ்ந்திருக்கவே முடியாது மார்க்சு குப்பைக் கூளங்களாக விட்டுச் சென்ற கையெழுத்துப் பிரதிகளை முறைப்படுத்தி, வகைப் படுத்தி, தொகுத்து, விரிவுப்படுத்தி, முழுமைப்படுத்தி 'மூலதனம்' எனும் நூலின் இரண்டாவது மூன்றாவது பகுதிகளை உருவாக்கி உலகுக்கு கொடுத்த பெருமை எங்கல்சையே சேரும்.

எங்கல்சின் பேருதவியிருந்தும் கூட கார்ல்மார்க்சு வறுமையின் கோரப்பிடிப் -பில் சிக்குண்டு, வதையுண்டு எல்லையில்லாத் துன்பத்தை அனுபவிக்கத்தான் நேர்ந்தது. வறுமைத்துயரம் தாங்காமல் கார்ல் மார்க்சு தனது குழந்தைகளை அனாதை விடுதியில் சேர்த்து விட்டு, தான் மட்டும் எங்காவது எழுத்தர் வேலை கிடைக்காதா? என்று வேலைத் தேடியலைந்தது உண்டு. அவரது வாழ்நாளில் கடைசி சில ஆண்டுகள் தவிர அவர் வசதியான இடத்தில் வாழ்ந்ததும் இல்லை. வயிரார உண்டதும் இல்லை. அவர் தனது மேல் கோட்டையும் குழந்தைகளின் காலணிகளையும் கூட விலைக்கு விற்று வாழ வேண்டிய கொடிய வறிய வாழ்க்கையை வாழ்ந்திட்டார்.

-தொடரும்

# புரட்சி மயங்கக் கூடாது — 5

—சித்தர் கருவூரார்

இப்போக்கினை நான் ஏற்றுக் கொளவதேயில்லை, பிறரைப் புண்படுத்தாமல் மிகமிக மென்மை -யாக கனிவாக, இனிமையாக, அன்பாக கருத்துக்களை வெளியிட வேண்டும் என்பதே என் கொள்கை

நமது நாட்டு நடப்பில் இந்திய விடுதலை இயக்க வளர்ச்சி காலத்திலிருந்து இன்றுவரை 'சமய - சமுதாய - அரசியல், கலைத் துறைத் தலைவர்கள் அனைவருமே முறையாக கல்வி கற்காதவர் -கள் தான் அப்படியே ஒரு சிலர் கற்றவராக இருந்தாலும் அவர்கள் வெளிநாடுகளில் பட்டம் பெற்றவராகவே உள்ளனர் இவற்றையெல்லாம் உன்னிப்பாக ஆராய்ந்தால் இந்த நாட்டின் கல்வி துறை நல்ல அடிமைகளை வாயில்லாப் பூச்சிகளை, கூண்டுப் பறவைகளை பட்டி போட்ட வண்டி -யிழுக்கும் குதிரைகளை, ஒரே இடத்தில் சுற்றி சுற்றி வரும் செக்கு மாடுகளை, நின்று நின்று வண்டியிழுக்கும் ஊராட்சி குப்பைவண்டி மாடுகளை கண்டபடி திரிந்து காகிதம் தின்று பொதி சுமைக்கும் கழுதைகளை, நாற்றமடிக்கும் சாக்கடையை நறுமணமிக்க பஞ்சணையாக கருதிப் படுத்துப புரண்டு வாழும் பன்றிகளை, வாசலில் சங்கிலியால் கட்டப்பட்டு வருவோர் போவோரைக் குரைக்கும் நாய்களை எச்சிலைக்கூடக் கிடைக்காமல் சொறி பிடித்துத்திரியும் எலும்புருக்கி நோய்பிடித்த நாய்களை உருவாக்குவதில் தான் பெறற்குரிய பெரிய வெற்றியென பெற்று வருகின்றது ........

என் தந்தையின் எழுத்துக் குவியல்களிலிருந்து எடுக்கப்பட்ட கருத்து இதனை நான் அப்படியே ஏற்றுக் கொள்ள இயலவில்லை. இருந்தாலும் இப்படிப்பட்ட கருத்தை எடுத்துக் கூறுவதன் மூலம என் கருத்தை ஓரளவாவது விளக்க முடிகின்றது என்னுல் ... என்ற வார்த்தையின கருத்தையே என்னுல் கூறிக் கொள்ள முடிகின்றது இத்திரு நாட்டின் அவலங்களையும், கேவலங்களையும், ஆதிக்க வெறியாட்டங்களையும், ஊழல்களையும், சுரண்டல்களையும், கள்ளச் சந்தைகளையும், கொள்ளை இலாபப் போக்குகளையும், அரசியல் வழிகளில் பித்தலாட்டங்களையும், விழாக்கள் கொண்டாடி வீண் பொழுது போக்கும் அயோக்கியத் தலைவர்களையும நினைத்து நினைத்து குமுறும எரிமலையாக இன்னும் எவ்வளவு காலம் இருப்பது? ...... உடனே வெடித்து நெருப்பாறு ஓடச் செய்யும் எரிமலையாக மாறிட வேண்டும்!!!... என்ற துடிதுடிப்பே ஏற்படுகின்றது.. எனவே தான் நான் என்னைக் கண்டே அச்சப்பட்டு ஆழ்கடல் முத்தாகி, அடர்காட்டு மலராக, மலைக்காட்டுச் சந்தனமாக வாழுகின்றேன், வாழமுற்படுகின்றேன்.

விடுதலை பெற்ற இந்தியாவில் விடுதலைப் போராட்டக் காலத்தில் விளம்பரம் பெற்ற பெரியவர்களின் வாரிசுகளே எல்லாத் தலைமைகளையும உரிமைகளையும், பெருமைகளையும், செதி வாய்ப்புக்களையும் துய்க்க வேண்டுமெனற துடிதுடிப்பால் பெரும்புயல் அடிக்கின்றது இப்புயலில் ஏற்படும் பெரிய பெரிய இழப்புகளில், இடிபாடுகளில், சிதைவுகளில், அழிவுகளில் ... கிடைப்பதைத் தேடிப் பெற்று வாழ்வு நடத்துகிருர்கள், புரட்சி மேதை 'காரல் மார்கசின்' பெயரைச் சொல்லு பவர்கள் இந்த நாட்டில் என்றைக்குமே சமத்துவம் வந்து விடாமல் பாதுகாக்கவே உயர்ந்த சாதிக் காரர்களும பணக்காரர்களும் கம்யூனிச இயக்கத்தைத் தங்களின் கைபிடிக்குள்ளேயே வைத்திருக் கிருர்கள். பரம்பரை முதலாளிகள் மதம் கலை, இலக்கியம் முதலியவற்றின் பெயரால் மக்களை பகற்கனவு காண்பவர்களாகவும், கானல் நீரை நோக்கி ஓடும் மான்களாகவும் பழமைப் பற்றும் பிற்போக்குத் தன்மையும், மூடநம்பிக்கையும் உடையவர்களாகவும் ஆக்கி வருகிருர்கள் எனவே தான் இந்துமதததின் தாயான சித்தர் நெறியின் The siddharism is the mother of the 'INDUISM' மூலம் அறிவியல் பூர்வமான சமய சமுதாய அரசியல், கலை, இலக்கியக் கொள்கைகளைப் பரப்பும் பணியை விரைவு படுத்தவும், விரிவுபடுத்தவும முற்படுகின்றேன் நான் பதினெண் சித்தர்களும் மற்ற சித்தர்களும் உருவாக்கிய இந்துமதம் ஒன்று தான் எல்லா மடமைகளையும், மூடத்தன்மை களையும், அறியாமைகளையும், அநீதிகளையும் சமுதாய நல விரோகங்களையும், சமுதாய நலத் துரோகங்களையும் ஆதிக்க வெறியர்களையும் தீண்டாமைக் கொடுமைகளையும், பொருளாதார ஏற்றத் தாழ்வுத் துன்பங்களையும், வறுமைக் கொடுமைகளையும் சுரண்டல் கொள்கைகளையும ......நேரடியாக கண்டிக்கிறது.

—தொடரும்

# 1987-லிருந்து குருதேவர் அறிக்கை வெளிவருவதா? வேண்டாமா?

## ஓர் முக்கிய அறிவிப்பு

அன்பார்ந்த வாசகநேயர்களுக்கு,

எதிர்பார்த்த அளவிற்கு சந்தாதாரர்கள் கிடைக்காததாலும், பொருளாதாரக் குறைவாலும், விலைவாசி ஏற்றத்தாலும் இந்த ஆண்டிலி-ருந்து (1987) தொடர்ந்து 'குருதேவர்' அறிக்கை வெளிவருமா? என்பது சந்தேக-மாகவே உள்ளது. கடந்த மூன்றுண்டு காலமாக இவ்வறிக்கை தமிழின மொழி, நாடு ஆகியவற்றின் மறுமலர்ச்சிக்காக ஆற்றிவரும் எழுத்துப்பணி எவ்வளவு மகத்தானது என்பதைத் தாங்கள் அறிவீர்கள் இன்றைய நிலையில் ஆபாசம், அரசியல், கதை கவிதை...... முதலியவற்றால் இந்நாட்டின் பெரும்பாலான பத்திரிக்கைகள் மக்களை ஏமாற்றியும், சுரண்டியும் அடிமைப்படுத்தியும் வருகின்றன. இவைகளின் நடுவே முழுமையான பண்பாட்டு வளவளர்ச்சியைக் கருத்தில் கொண்டு நடத்தப்படும் எங்களுடைய பத்திரிக்கைக்கு மக்கள் எந்த அளவுக்கு ஆதரவு தரு-வார்கள் என்பதை நாங்கள் அறிவோம்?!?!?! இருந்தாலும், 1987-ஆம் ஆண்டுக்கான குருதேவர் அறிக்கை தொடர்ந்து வெளிவர வேண்டுமென விரும்புகின்றோம். அதாவது இருளுக்குள் முடங்கிக்கிடக்கும் தமிழக மக்களை வெளிச்சத்துக்கு கொண்டு வர விரும்புகின்றோம். இந்த விருப்பம் நிறைவேற அந்தந்த வட்டாரத்து இயக்க அடியான்கள் அனைவரும் 'குருதேவர் சந்தாவை' சனவரி-'87 க்குள் புதுப்பிக்க வேண்டுகின்றோம். மேலும், சன்னிதானங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட சந்தாதாரர்களும் 87க்கான சந்தாவை புதுப்பிப்பதற்கான முயற்சியினை சன்னிதானங்கள் எடுக்க வேண்டுகின்றோம். குறைந்தது 75 சதவீதமாவது புதுப்பிக்கப்பட்டால் தான் குருதேவர் அறிக்கை தொடர்ந்து வெளிவரும் என்று அறிவிக்கிறோம். குறைந்தது 200 புதிய உறுப்பினர்களாவது சேர்ந்தால்தான் இடைவிடாமல் தொடர்ந்து 'குருதேவர் அறிக்கை' அடுத்த ஆண்டில் மலர்ந்து மணம்வீசும் என்றும் அறிவிக்கின்றோம்.

**தனி இதழ் ரூ 2-50** **ஆண்டுச் சந்தா ரூ 25/-**

இங்ஙனம்,
**ஆசிரியர் குழு.**

---

**குறிப்பு:-**

எல்லாச் சன்னிதானங்களும் குருதேவர் அறிக்கைச் சந்தாவாக ரூ. 25/- ஐ உடனே அனுப்ப வேண்டும். மேலும் ஒவ்வொருவரும் தங்களுக்கு தெரிந்தவரை சந்தாதாரர்களாக ஆக்கவேண்டும். ஏற்கனவே உள்ள சந்தாதாரர்களைப் புதுப்பிக்கச் செய்ய வேண்டும் இவற்றிற்கெல்லாம் மேலாக ஒவ்வொரு சன்னிதானமும் 1987க்காக ஒரு புதிய சந்தாதாரரையாவது சேர்க்க வேண்டும் - குருவாணை. ஞாலகுரு சித்தர் கருவூரர்

---

KVS பிரிண்டர்ஸ், பொன்னேரி-601204.